**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Civil Procedure)

**C.C. No. 216/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of L.W. 1 | | Examined as :PW.1 | |
| Name | அனுஷ்யா | Defence | : |
| Husband Name | கலையழகன் | Court | : |
| Village | கீழத்தெரு, வல்லம். | Taluk | : |
| Calling | | Religion | : |
| Age | 31 | | |

The oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969)

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை:–

நான் வல்லம் கீழத்தெரு என்ற முகவரில் வசித்து சுயத்தொழில் மைக்ரோ பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 27.08.2020 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் நானும், எனது 8 வயது மகளும் வீட்டில் இருந்தபோது கலைவாணன், சத்யவாணி, தமிழ்வாணன், செல்வராஜ் ஆகியோர்கள் எனது கணவர் வேலைக்கு சென்ற பிறகு எனது வீட்டிற்கு வந்து வாசலில் நின்றுகொண்டு 4 எதிரிகளும் குச்சிகாரி மகளே, தேவடியா மகளே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எனது பக்கத்துவீட்டில் வசித்து வரும் எனது பாட்டி அந்த சமயம் வந்து ஏன் கணவர் இல்லாத நேரத்தில் திட்டுகிறீரகள் என்று கேட்டார். அதற்கு எல்லா பிரச்சனைகளும் உன்னால் தான் என்று பாட்டியை நான்கு பேரும் கீழே தள்ளிவிட்டனர். கலைவாணனும், தமிழ்வாணனும் எனது வீட்டிற்கு எதிரே உள்ள அவர்களது வீட்டிற்கு சென்று இரும்பு பைப்பை எடுத்து வந்து என்னையும், எனது பாட்டியையும் தாக்கினார்கள். அதில் என்னை வலது கழுத்து பகுதியிலும், வலது முழங்கையிலும் தாக்கினார்கள். எனது பாட்டியை இடது பக்க தோள்பட்டையில் தாக்கினார்கள். பின்னர் ஆஜர் எதிரிகள் நான்கு பேருமே

எங்களை உயிரோடு விடக்கூடாது என்று மிரட்டினார்கள். எதிரி சத்யா எனது தலைமுடியைப்பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். பின்னர் அவர்கள் சென்ற பின்னர் வாடகை கார் பிடித்து நானும் எனது பாட்டியும், மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். மறுநாள் செம்பனார்கோவில் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து இரண்டு பக்க அளவில் எழுதிக்கொண்டார்கள். படித்துப்பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

எதிரிகள் எனது உறவுக்காரர்கள் என்றால் சரிதான். எதிரிகளின் சொத்து பத்திரத்தை நான் அடமானம் வைத்து பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக எங்களுக்குள் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு 1, 1/2 வருடத்திற்கு பிறகு எனது கணவரும், அவரது சகோதரரும் எதிரிகளிடம் தகராறு செய்தது சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று காலை 11.00 மணியளவில் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவர் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். போலீசார் என்னை மறுநாள் தான் விசாரித்தார்கள். விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்று தெரியாது. செம்பனார்கோவில் போலீசார்தான் எழுதினார்கள். அந்த புகார் வாக்குமூலத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது, எத்தனை பக்கம் எழுதப்பட்டிருந்தது என்றால் இரண்டு பக்கம் எழுதப்பட்டிருந்தது. நான் கூறிய விபரங்களை தான் அதில் எழுதியிருந்தது. சம்பவமானது 27.08.2020 அன்று காலை 10.30 மணியளவில் நடந்தது. எங்கள் ஊரிலிருந்து செம்பனார்கோவில் காவல் நிலையத்தை கடந்துதான் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனை எங்கள் ஊரிலிருந்து எத்தனை கிமீ இருக்கும் என்றால் சுமார் 10 கிமீ இருக்கும். நாங்கள் அரசு மருத்துவமனைக்கு வாடகைகாரில் சென்றோம். நாங்கள் போகும்போது காவல் நிலையத்திற்கு செல்லவில்லை, மருத்துவமனைக்கு தான் சென்றோம். நான் முதல் விசாரணையில் கலைவாணன், சத்தியவாணி, தமிழ்வாணன்,

செல்வராஜ் ஆகியோர்கள் எனது வீட்டு வாசலில் நின்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்ற விபரத்தை புகார் வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறீர்களா என்றால் சொல்லியிருக்கிறேன். எனது பாட்டியை கீழே தள்ளி விட்டார்கள் என்றும், யார் தள்ளி விட்டார்கள் என்று பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தமிழ்வாணனும், கலைவாணனும் அவர்கள் வீட்டிற்கு சென்று இரும்பு பைப்பை எடுத்து வந்து அடித்தார்கள் என்ற விபரத்தை புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரிகள் நான்குபேரும் சேர்ந்து எங்களை உயிரோடு விடக்கூடாது என்று மிரட்டினார்கள் என்ற விபரதயை புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் தான் 1 வது எதிரியின் காரின் மீது குப்பையை போட்டுவிடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது பாட்டிக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் திருக்கடையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 108 ஆம்புலன்ஸ் ஓட்டுனராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். நான் சொல்லுவதுபோல் எதிரிகள் எங்களை அடித்திருந்தால் எங்களுக்கு எலும்பு முறிவோ அல்லது கொடுங்காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.நான் சொல்லுவதுபோல் சத்தியா எனது தலைமுடியைப்பிடித்து இழுத்து அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், எங்களுக்கும் சிவில் பிரச்சனை இருந்து வருவதால் அவர்கள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்கள் எங்களை திட்டி அடித்ததாக பொய்யாக புகாரைக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் 3 வது எதிரியை அடித்தேன் என்றாலும், அவர்கள் அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Civil Procedure)

**C.C. No. 216/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of L.W. 2 | | Examined as :PW.2 | |
| Name | சுசீலா | Defence | : |
| Husband Name | சின்னதம்பி | Court | : |
| Village | வல்லம். | Taluk | : |
| Calling | | Religion | : |
| Age | 60 | | |

The oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969)

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை:–

நான் வல்லத்தில் வசித்து வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். அசா1 எனது பேரனின் மனைவி, பேத்தி முறையாவார்,. ஆஜர் எதிரிகள் எனது பங்காளி முறையில் உறவினர்கள். எதிரிகள் குடும்பத்தாருக்கும், பேரன் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே சொத்து சம்பந்தமாக தகராறு இருந்துவந்தது. அசா1 எனது பேத்தியின் வீட்டிலிருந்து 3 வது வீட்டில் நான் வசித்து வருகிறேன். இந்த நிலையில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி நினைவில் இல்லை ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது காலை 10.00 மணியளவில் எதிரிகுடும்பத்தாருக்கும், எனது பேரன் மனைவிக்கும் இடையே கொல்லை சம்பந்தமாக தகராறு நடந்தது. சத்தம் கேட்டு எனது பேத்தியின் வீட்டிற்கு சென்றேன். அப்போது அசா1 சத்தியா எதிரிகளை அராஜகமாக பேசியது தொடர்பாக அதனை கேட்பதற்காக கலைவாணனும், சத்தியாவும், அனுஷ்யா வீட்டு வாசலுக்கு வந்து அராஜகமாக பேசினார்கள். நான் அவர்கள் இருதரப்பினரையும் தகராறு வேண்டாம் என்று தடுக்கும் விதமாக பேசிக்கொண்டிருந்தபோது செல்வராஜ் கையால் என்னை இடது பக்க கழுத்து பகுதியில் பலமாக தாக்கினார். செல்வராஜ் குச்சிகாரி தேவடியா, உன்னைதான்

எதிர்பார்த்தேன் என்று சொல்லிக்கொண்டே தாக்கினார். அப்போது கலைவாணன் தனது அப்பாவான செல்வராஜை அடித்து அந்த இடத்திலிருந்து அழைத்துச்சென்றார். பின்னர் மருத்துவமனைக்கு செல்வதற்காக கழுத்தை பிடித்துக்கொண்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அசா1ன் கணவர் கலையழகன் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் தனது மனைவியிடம் தகராறு செய்த எதிரி குடும்பத்தாருடன் தகராறு செய்வதற்காக வந்தார். இருதரப்பும் தாக்கிக்கொள்வதுபோல் கட்டையை வைத்துக்கொண்டு தகராறு செய்துகொண்டனர். பின்னர் கலையழகன் வைத்திருந்த கட்டையை பிடிங்கிப்போட்டுவிட்டு கலையழகன் தான் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார். அசா1 அனுஷ்யாவும் என்னோடு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். அவரை யார் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>:–

போலீசார் என்னை மருத்துவமனையில் சம்பவத்தன்று மறுநாள் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அசா1ஐ யாரும் அடித்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காலை 11 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர் என்னை விசாரணை செய்தார். செல்வராஜ் என்னை அடிக்கவில்லை என்றாலும், சம்பவ தினத்தன்று சம்பவ இடத்திலேயே நான் இல்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே சிவில் சம்பந்தமான பிரச்சனை இருப்பதால் தான் நான் செல்வராஜ் என்னை அடித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.